**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.67/2017**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி D. ஞானசௌந்தரி அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு மார்ச் மாதம் 06 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அலெக்சாண்டர் | மதம் | : இந்து |
| த/பெ | : மூர்த்தி | ஜாதி | : -- |
| வயது | : 35 | கிராமம் | : பொன்பாடி |
| தொழில் : | தையல் தொழில் | வட்டம் | : திருத்தணி |

**06.03.2026**
**வா.சா. 2 மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை**

1. நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் திருவள்ளூரில் தனியார் துணி நிறுவனத்தில் வேலை செய்கிறேன். என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் பட்டா மோசடிக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் பட்டா மோசடி தவிர வேறு பரிகாரம் கேட்கவில்லை என்றால் பட்டா வேண்டுமென்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தின் புல எண் என்ன என்றால் புல எண் மறந்துவிட்டது. பாலன் யார் என்றால் என் பெரியப்பா ஆவார். வழக்கு சொத்தை இரண்டாம் பிரதிவாதிக்கு என் அப்பா விற்பனை செய்த போது நான் இளவர் என்றால் என் அப்பா விற்றது எனக்கு தெரியாது. 2001ல் எனக்கு என்ன வயது என்றால் 14 வயதாகும். 2001ல் நான் என் அப்பாவுடன் இருந்தேன் என்றால் அக்காவுடன் இருந்தேன். என் அக்காதான் என்னை வளர்த்தார்.

2. என் பாட்டி பெயர் என்ன என்றால் குப்பம்மாள் ஆகும். என் பாட்டி எனக்கு எப்போது உயில் எழுதி வைத்தார் என்றால் 1996 ஆகும். தேதி, மாதம் தெரியுமா என்றால் 18ம் தேதி 6ம் மாதம் ஆகும். என் பாட்டி குப்பம்மாள் எப்போது இறந்தார் என்றால் 08.03.1994ல் இறந்தார். பாட்டி இறந்த பின்பு உயிலை

நடைமுறைப்படுத்தி பட்டா மாற்றினோமா என்றால் இல்லை. இதுநாள் வரை பட்டா மாற்றவில்லை என்றால் சரிதான். 1996ல் என் பாட்டி எழுதி வைத்ததாக சொல்லும் உயிலை இன்றுவரை நடைமுறைப்படுத்தி பட்டா மாற்றாததால் அந்த உயில் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. என் பெயரில் உள்ள உயில் காலாவதியான உயில் என்றாலும் அது பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றாலும் சரியல்ல. நான் இந்த வழக்கை உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரிதான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சொத்து என்னுடையது என விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றாலும் சரியல்ல. பட்டா வேண்டும் என்றுதான் தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

3. தற்போது வழக்கு சொத்தி பிரேமாவதியும் பெரியசாமியும் அனுபவித்து வருகிறார்கள் என்றால் நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம். எங்கள் அனுபவத்தை காட்ட வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்து எங்கள் அனுபவத்தில் இருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் உண்மையிலேயே அவ்வாறு அனுபவத்தில் இருந்திருந்தால் பட்டா, சிட்டா உள்ளிட்ட வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. 2001ல் 2ம் பிரதிவாதி கிரையம் பெற்று அது முதல் பட்டா, சிட்டா அவர் பெயருக்கு பெற்று 2ம் பிரதிவாதிதான் அனுபவித்து வருகிறார் என்றால் இல்லை. எனக்கும் என் சகோதரருக்கும் தெரிந்துதான் என் அப்பா விற்பனை செய்தார் என்றாலும் அந்த விவரம் எங்களுக்கு முன்பே தெரியும் என்றாலும் நாங்கள் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றாலும் சரியல்ல.

4. நானும் என் சகோதரரும் சேர்ந்து 2011ல் திருத்தணி காவல் நிலையத்தில் 3ம் பிரதிவாதி மீது புகார் கொடுத்தோம் என்றால் ஆமாம். எதற்காக அந்த புகார் கொடுத்தோம் என்றால் வாய்தகராறுக்காக புகார் கொடுத்தேன். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் 2ம் பிரதிவாதி பிரேமாவதி வழக்கு சொத்தை கிரையம் பெற்றது செல்லாது என்றும் பட்டா ரத்து செய்ய வேண்டும் என்றும்

ஏமாற்றி கிரையம் பெற்றுவிட்டார்கள் என்றும் குறிப்பிட்டுதான் அந்த புகாரை கொடுத்துள்ளோம் என்றால் இல்லை. வாய்தகராறுக்காக கொடுத்தோம். 2ம் பிரதிவாதி வழக்கு சொத்தை கிரையம் பெற்ற விவரம் புகார் கொடுத்த 2011லேயே தெரியும் என்றால் 2017ல்தான் தெரியும். நான் கொடுத்த புகாரின் பேரில் திருத்தணி காவல்துறையினர் வழக்கு பதிவு செய்தனர் என்றால் ஆமாம். அந்த வழக்கு எண். CC No.205/2011 என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 4 CC No.205/2011க்குரியது என்றால் ஆமாம்.

5. மேற்படி வழக்கில் திருத்தணி குற்றவியல் நீதிமன்றத்தில் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் என் அண்ணன்தான் சாட்சியம் அளித்தார். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் என் பெயர் மேற்படி வழக்கின் தீர்ப்பின் சாட்சி பட்டியலில் உள்ளது என்றாலும் சரியல்ல. நான் சாட்சியம் அளிக்கவில்லை. CC No.205/2011 வழக்கு என்ன ஆனது என்றால் அது அப்படியே நிறுத்திவைக்கப்பட்டுவிட்டது. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் CC No.205/2011 வழக்கு 11.02.2014ல் அந்த வழக்கு பொய்யானது என்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் அப்பா 2001ல் 2ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த கிரைய ஆவணம் 2011லேயே எங்களுக்கு தெரியும் என்றாலும் இதுகுறித்து நாங்கள் கொடுத்த புகாரின் பேரில் பி.வா.சா.ஆ 4ல் வழக்கு நடந்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது என்றாலும் மேற்படி வழக்கில் 2ம் சாட்சியாக சாட்சி அளித்துவிட்டு தற்போது உண்மை விவரங்களை மறைத்து பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

6. 2011லேயே எனக்கு 2ம் பிரதிவாதிக்கு என் அப்பா கிரையம் கொடுத்த விவரம் தெரிய வரும் நிலையில் நான் 3 ஆண்டு காலத்திற்குள் உரிய வழக்கு தாக்கல் செய்யாமல் காலம் கடந்து நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு சட்டப்படி செல்லாது என்றாலும் என் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)